பதிவு தபால்

சென்னை– 6, மீன்துறை துணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

வழங்குபவர்: திரு. ஜே. விஜயகுமார்

ந.க.எண். 2384 /எஸ்2/2015 நாள்: 08.06.2015

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மீன்துறை இயக்குநரின் செயல்முறை நடவடிக்கை எண். 5082/எம்5/2013, நாள்: 10.01.2014 மற்றும் 25.02.2014.
2. தலைமை பொறியாளர், சென்னை ந.க.எண். 46/இ2/2014, நாள்: 13.01.2015 மற்றும் 16.02.2015.
3. மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்) இராமநாதபுரம் ந.க. எண். 418/அ1/2015, நாள்: 29.01.2015.
4. மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை ந.க. எண். 3615/அ1/2012, நாள்: 15.04.2015.

******

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை–1ல் காணும் மீன்துறை இயக்குநரின் செயல்முறை நடவடிக்கையில் ஆணையிட்டவாறு கீழ்காணும் பணியாளர்கள் அவர்களது பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாளன்று பணியில் சேர்ந்துள்ளனர்.

| வ. எண். | பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | செல்வி. ரா. தனலெட்சுமி | 23.01.2014 முற்பகல் | தலைமை பொறியாளர், சென்னை |
| 2. | திருமதி.ப. சண்முகப்பிரியா | 23.01.2014 முற்பகல் | மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்) இராமநாதபுரம் |
| 3. | திரு. கா. அய்யனார் | 03.03.2014 முற்பகல் | மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை. |

மேற்காணும் பணியாளர்களது பணியினை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிக்கான பொது விதி 23(a) (1)–ன் படி சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியில் அவர்கள் மீன்துறையில் பணியில் சேர்ந்த நாள்முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் பணியில் சேர்ந்த நாள்முதல் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியில் தொடர்ந்து வரும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

சென்னை / மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கின் இறுதி ஆணைக்கு உட்பட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.

இவர்கள் தகுதிகாண் பருவ காலத்தில், தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் கணினி ஆட்டோமேஷன் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மீன்துறை துணை இயக்குநர்
(பணியாளர்)

பெறுநர்

1. செல்வி. இரா. தனலெட்சுமி,
   சுருக்கெழுத்து தட்டச்சர்,
   தலைமை பொறியாளர், சென்னை – மூலமாக
2. திருமதி.ப. சண்முகப்பிரியா,
   சுருக்கெழுத்து தட்டச்சர்,
   மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்) இராமநாதபுரம் – மூலமாக
3. திரு. கா. அய்யனார்,
   சுருக்கெழுத்து தட்டச்சர்,
   மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை – மூலமாக

நகல்:

தலைமை பொறியாளர், சென்னை

மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்) இராமநாதபுரம்

மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை.

– தனியரின் பணிப்பதிவேடுகள் இத்துடன் இணைத்தனுப்பபடுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகையினை அளிக்குமாறும் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தை அவர்களது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறும் சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எம்5 – உதவியாளர், தலைமை அலுவலகம்.

எஸ்2 – இருப்பு கோப்பு.

தலைமை பொறியாளர் அலுவலகம்
மீன்வளத்துறை
சென்னை - 600 006

ந.க.எண் :- 46/இ2/2014 நாள் :- 06.2015

அனுப்பப்படுகிறது.

தலைமை பொறியாளர் அலுவலகம்
மீன்வளத்துறை,
சென்னை - 600 006.

பெறுநர் :-
செல்வி. இரா. தனலெட்சுமி
சுருக்கெழுத்து தட்டச்சர்
தலைமை பொறியாளர் அலுவலகம்
மீன்வளத்துறை சென்னை-6

15.6.15